| | |
|---|---|
| | **தமிழ்நாடு அரசு**<br>**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**<br>**வட்டாட்சியர் அலுவலகம், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்.** |

**அறிவிக்கை எண்.02/2025** **நாள். 10.10.2025**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டத்தில் காலியாக உள்ள 05 (ஐந்து) கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்தவதற்காக இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025 நாள்.25.07.2025 – ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில் தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

**(குறிப்பு : இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025 நாள்.25.07.2025 – இன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை )**

| | |
|---|---|
| **விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்.** | 13.10.2025 முதல் |
| **விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்.** | 27.10.2025 மாலை 5.45 மணி வரை |
| **பதவியின் பெயர் :** | கிராம உதவியாளர். |
| **சம்பள விகிதம்:** | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 – 35,100/– |
| **வட்டத்தின் பெயர்:** | மண்மங்கலம் |
| **காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை** | 05 |

**இனசுழற்சி விவரம்**

| வ. எண் | நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம். | இன சுழற்சி | பட்டியல் வகுப்பு | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | பொது ஆண்/ பெண் | ஆதரவற்ற விதவை /முன்னாள் இராணுவத் தினர் /மாற்றுத் திறாளி |
|---|---|---|---|---|---|---|
| 1. | நஞ்சை கடம்பன்குறிச்சி | 16 | பட்டியலினத்தவர் (SC) | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 2. | அப்பிபாளையம் | 17 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC & DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | தமிழ் வழியில் கல்வி பயின்றவர் |
| 3. | பள்ளபாளையம் | 18 | பிற்படுத்தப்பட்டோர் – BC (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பெண். | |
| 4. | நெரூர் தெற்கு | 19 | பொதுப்பிரிவினர் (GT) | முன்னுரிமையற்றவர் | பெண். | |
| 5. | ஆத்தூர். | 20 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள்தவிர) | முன்னுரிமையுடையவர் | பொது | |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | 1. தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>(குறிப்பு : SSLC மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் .<br>குறைந்த பட்ச கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு (தேர்ச்சி / தோல்வி)<br>2. தமிழில் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள். | 1. விண்ணப்பதாரர் மண்மங்கலம் வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>4. தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ, மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்கக்கூடாது. |

வயது : 01.07.2025 அன்று

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | இதர பிரிவினர் / பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர் / அட்டவணை வகுப்பினர் (அருந்ததியின/பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

குறிப்பு :

I. மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும்.

II. முன்னாள் இராணுவத்தினருக்கு அதிகபட்சம் 50 வயதும், இதர பிரிவினருக்கு 55 வயதும் வழங்கப்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கரூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான http://www.karur.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் மண்மங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்த ஒரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| குறிப்பு | தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி/இரு சக்கர வாகனம் ஓட்டும் திறன் / வாசித்தல் / எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியாக கடிதம் அனுப்பி வைக்கப்படும். |

வட்டாட்சியர்,
மண்மங்கலம்.